வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்

அனுப்புநர்
கூடுதல் தலைமைச் செயலர் /
வருவாய் நிருவாக ஆணையர்,
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை–5.

பெறுநர்
மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி மாவட்டம்.
(இணைப்புடன் – பதிவஞ்சல் ஒப்புகையுடன்)

RT 3048 2 7136 U IV
4/4

கடித எண். ஆ.கு.4/13995/2015, நாள்.16.06.2021

அய்யா,

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகு – பாவூர்சத்திரம் வேளாண்மை வளர்ச்சி அலுவலகம் – சுரண்டை வேளாண் விரிவாக்க மையத்தில் இரவுக் காவலராகப் பணியாற்றி, பணியிடையே 26.01.2001 அன்று காலஞ்சென்ற திரு.சு.திருமலை என்பவரின் மகன் திரு.தி.சங்கரசுப்பு என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை செய்யப்பட்டது – அரசளவில் பதிவு செய்யப்பட்டது – அசல் சான்றுகள் மீள அனுப்புவது – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.02.03.2016.
2. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் கடித எண்.அ4/24081/2014, நாள்.02.08.2019.
3. இவ்வலுவலக கடித எண். ஆ.கு.4/13995/2015, நாள்.04.11.2019.
4. அரசு கடித (3டி) எண்.65 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, பணி 9(2), நாள்.06.05.2021.

******

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலகில், பாவூர்சத்திரம் வேளாண்மை வளர்ச்சி அலுவலகம், சுரண்டை வேளாண் விரிவாக்க மையத்தில் இரவுக் காவலராகப் பணியாற்றி, பணியிடையே 26.01.2001 அன்று காலஞ்சென்ற திரு.சு.திருமலை என்பவரின் மகன் திரு.தி.சங்கரசுப்பு என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வருவாய்த்துறையில், திருநெல்வேலி மாவட்ட அலகில் பணியமர்த்தப்பட்ட நாளான 24.11.2010 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அவரது பணியினை வரன்முறை செய்ய மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவினை ஏற்று அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

3) இதனைத் தொடர்ந்து, பார்வை–4ல் காணும் அரசுக் கடிதத்தில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின்